05.12.2017

தி இந்து

தமிழால் இணைவோம்

# மீனவர்கள் மூன்று நாட்கள் கடலுக்கு செல்ல வேண்டாம்: வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை



கோப்புப் படம் | படம்: வி.எம்.மணிநாதன்

புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை மீனவர்கள் மூன்று நாட்களுக்கு கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.பாலச்சந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த இரண்டு நாட்களாக தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டி மையம் கொண்டுள்ள வலுவான குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி கடந்த இரண்டு நாட்களாக தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டி வலுவாக மையம் கொண்டுள்ளது. இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அடுத்த 12 மணிநேரத்தில்

வலுப்பெறும் வாய்ப்புள்ளது. அடுத்த 48 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும்.

குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமான பிறகு மேற்கு மற்றும் வடமேற்கு திசையை நோக்கி அது நகரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை மூன்று நாட்களுக்கு (டிச.6, 7, 8) கடலுக்குச் செல்ல வேண்டாம். ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றவர்களும் கரைக்கு திரும்ப வேண்டும்.

தற்போது வடகிழக்குப் பருவமழை காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்றும் நாளையும் ஓரிரு இடங்களில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும்.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யும்" என்று பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.